# 21 இலங்கைச் சைவஆலயங்கள்

## சிவாலயங்கள்

### 1. திருக்கேதீச்சரம்

**(அ) ஆலய அமைவிடம்**



மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்களுடனும் விளங்கும் திருக்கேதீச்சரத் திருத்தலம் இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்திலே அமைந்துள்ளது. மன்னார்த் தீவினை வடமாகாணப் பெருநிலப்பரப்புடன் இணைக்கும் பாலத்தின் மார்க்கமாக மன்னார் நகரிலிருந்து தென்திசையாக சுமார் 10½ கிலோமீற்றர் தூரத்திலும், வடமேல் கடலோரத்திலிருந்து சுமார் ¾ கிலோமீற்றர் தூரத்திலும், பாலாவித் தீர்த்தக்கரையிலே இத்தலம் அமைந்துள்ளது.

இத்தலத்தின் மீது தேவார முதலிகளில் இருவர் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளனர். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய இருவரும் இராமேச்சரத்தை வழிபட்ட பின் அங்கிருந்தவாறே திருக்கேதீச்சரப் பெருமானை வணங்கிப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

**(ஆ) பண்டைய வரலாறு**

ஆதியில் கேதுவினால் பூசிக்கப் பெற்ற சிவத்தலம் ஆகையால் இது திருக்கேதீச்சரம் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. பின்னாளில் திருக்கேதீச்சர மூர்த்தியை மயன், மகாதுவட்டா என்னும் இரு தேவதச்சர்கள் பூசித்துத் திருப்பணி புரிந்ததனால் திருக்கேதீச்சரம் மகாதுவட்டாபுரம் எனவும் பெயர் பெறலாயிற்று என்று தட்சிணகைலாய மான்மியம் கூறுகிறது. மகாதுவட்டாபுரம் என்பது காலப்போக்கில் மருவி மாதோட்டம் என வழங்குகிறது.

இராவணனின் மனைவி மண்டோதரி இத்தலத்தை வழிபட்டாள் எனவும் தீர்த்த யாத்திரைக்காக இலங்கை வந்த அர்ச்சுனன் வழிபட்டான் எனவும் தட்சிணகைலாய புராணம் கூறுகிறது.

விஜயன் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் தன் நண்பர்களுடன் இலங்கையின் வடமேற்கில் உள்ள தம்பபன்னியை அடைந்தான். அவனுடன் இலங்கைக்கு வந்த உபதிஸ்ஸன் எனும் பிராமணன் திருக்கேதீச்சரத்திலே பூசை செய்தான் என மகாவம்சம் கூறுகிறது. எனவே திருக்கேதீச்சரம் விஜயனின் காலத்தைய பழைமையானது என்று கொள்ள முடிகிறது.

விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையில் வாழ்ந்த இயக்கர்களும் நாகர்களும் அத்தலத்தை வழிபட்டு வந்துள்ளனர். இராவணன் இயக்க இனத்தைச் சேர்ந்தவன் என்பது ஐதீகம். திருக்கேதீச்சரத்தை நாகர்கள் வழிபட்டதற்குச் சான்றாக 'நாகநாதன்' என்ற ஒரு பெயரும் திருக்கேதீச்சர நாதருக்கு இன்னமும் வழங்கப்படுகிறது.

கி.பி 2ஆம் நூற்றாண்டில் உரோமர், பாரசீகர், அராபியர், சீனர் முதலிய பல தேசத்தவர்களும் மாதோட்டத்தில் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என அங்கு கண்டெடுத்த நாணயங்களால் அறியப்படுகிறது. ஏறத்தாழ இற்றைக்கு 3800 ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தைத் துறைமுகம் இருந்தது என்பதையும், அங்கிருந்து அக்காலத்தில் செம்பு ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும் இலங்கைத் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவிக்கிறது.

பிற்கால சோழர்களில் இராசேந்திரன், இடைக்காலப் பாண்டியர்களுள் முதலாம் சுந்தர பாண்டியன் முதலியோர் இவ்வாலயத்தில் திருப்பணிகள் செய்துள்ளனர். சோழர்களது காலத்தில் **இராசராசேசுவர மகா தேவன் கோயில்** என இவ்வாலயம் அழைக்கப்பட்டது. அத்தோடு மாதோட்டம் **ராஜராஜபுரம்** எனவும் தேரோடும் திருவீதி **ராஜராஜப் பெருந்தெரு** எனவும் அழைக்கப்பட்டது. இங்கு **திருவி இராமேஸ்வரம்** என்னும் சிவாலயம் ஒன்று இருந்ததாகவும் அறியமுடிகின்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மீது சைவர்கள் மாத்திரமன்றி பௌத்தர்களும் மிகுந்த ஈடுபாடுடையவர்களாக விளங்கினர். ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்கள மொழிக் கல்வெட்டு ஒன்றில் புத்தகோயில்களுக்கு கொடுக்கும் நன்கொடைக்கான சட்டங்களை மீறுவோர் மாதோட்டத்தில் பசுக்கொலை செய்ததை ஒத்த பாவங்களை பெறுவர் எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பெருமையுடன் விளங்கிய ஆலயம் 1690ஆம் ஆண்டு போர்த்துக் கேயரால் இடித்து அழிக்கப்பட்டது. கடற்பெருக்கால் இருந்த இடம் மறைந்து முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் வேதமாகிய தேவாரத் திருவுருவில் மட்டுமே திருக்கேதீஸ்வரப் பெருமான் உறைந்திருந்தார்.

**“மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன் பொந்து ஒன்று உள்ளது; அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது, அதனைச் சென்றடையுங்கள்”** என்று நாவலர் பெருமான் சைவ உலகத்திற்கு ஓர் விஞ்ஞாபனம் விடுத்தார். நாவலர் இறந்து 14 ஆண்டுகளுக்கு பின்னர். மு.பசுபதி செட்டியார் முதலான சைவப் பெரியார்களின் பெருமுயற்சியால் 1894ஆம் ஆண்டு பண்டைய கோயில் இருந்த இடம் கண்டு பிடிக்கப்பட்டது. புதை பொருள் செல்வங்களாக இருந்த புராதன மகாலிங்கம், விநாயகர், சோமாஸ்கந்தர், நந்தி என்பன கிடைக்கப் பெற்றன இங்கு பெறப்பட்ட மகாலிங்கம் இலங்கையில் உள்ள மகாலிங்கங்கள் எல்லாவற்றையும் விட அளவில் பெரியதாக அமைந்ததோடு. புராதன ஆலயத்தின் பிரமாண்டமான அமைப்பினை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது.

### (இ) மூர்த்திச் சிறப்பு





இத்தலத்தின் இறைவன் பெயர் திருக்கேதீச்சரநாதன். இறைவி பெயர் கௌரி அம்பாள். தல விருட்சம் வன்னி மரம். இக் கோவிலின்கண் எழுந்தருளியுள்ள இறைவன் அடியார்கள் மீதுவரும் தீவினைகளையும் குற்றம் மிகுந்த நோய்களையும் நீக்கியருளும் முக்கண் உடைய மூர்த்தி எனச் சுந்தரர் குறிப்பிடுகிறார்.

“ஊனத்துறு நோய்களடியார் மேல் ஒழித்தருளி, வெய்ய வினையாயவடியார் மேல் ஒழித்தருளி” என்பது சுந்தரர் தேவாரம். “மூவரென இருவரென முக்கண் உடை மூர்த்தி” என்னும் ஒருவரியினால் அயன், அரி, அரன் எனும் மூவராயும் சிவன், சக்தி என்னும் இருவராயும் இத்தலத்து இறைவன் சிறப்பிக்கப்படுகிறார்.

சுந்தரர் தம் தேவாரத்தில் கேதீச்சரநாதரை அட்டன் என்றும் சிட்டன் என்றும் கூறுகிறார். அட்டன் என்பது ஆகாயம், நிலம், நீர், வளி, அக்கினி, சூரியன், சந்திரன், இயமானன் (ஆன்மா) என்னும் எட்டு மூர்த்தங்களும் ஒன்று சேர்ந்த மூர்த்தி என்பது பொருள். சிட்டன் என்பது சிரேட்டன் என்பதன் சுருக்கம். அதாவது மேலானவன், முதன்மையானவன் என்று பொருள்.

திருவெண்ணெய் நல்லூரில் தம்மை ஆட்கொண்ட பெருமானும் திருக்கேதீச்சர நாதரும் ஒருவரே என்னும் பொருளில் “தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே” எனச் சுந்தரர் சுட்டுவது மனம் கொள்ளத்தக்கது. எனவே திருவெண்ணெய் நல்லூர் போன்ற இந்தியச் சிவத்தலங்களுக்கு ஈடான பெருமை வாய்ந்த ஈசன் திருக்கேதீச்சரத்தில் குடிகொண்டுள்ள மூர்த்தி என்று மனம் மகிழ முடிகிறது.

கேதீச்சரநாதரை கைதொழக் கடுவினை அடையாவே என்கிறார் சம்பந்தர். இவ்வகையான நிகரில்லாச் சிறப்பு வாய்ந்த மூர்த்தி திருக்கேதீச்சர மூர்த்தியாகும்.

### (ஈ) தலச்சிறப்பு

திருக்கேதீச்சரத் தலச்சிறப்புப் பற்றிக் கூறும் புராணம் ஒன்று இருந்ததாகவும் அது அச்சிடப்படாமல் அழிந்துவிட்டதாகவும் சேர். பொன். இராமநாதன் குறிப்பிடுகிறார். மேலும் தட்சிணகைலாய புராணத்தில் இத்தலச் சிறப்பு சுருக்கிக் கூறப்பட்டுள்ளது.

முன்பொருமுறை ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் போர் மூண்டது. ஆதிசேடன் மகாமேரு மலைக்குள் மறைந்து கொண்டான். எனவே வாயு பகவான் மேரு மலையின் மூன்று சிகரங்களையும் தூக்கிச் சென்றான் என்றும் அதில் ஒன்றை திருக்கேதீச்சரத்தில் வைத்தான் என்றும் அத்தலத்தின் சிறப்பைப் புராணம் குறிப்பிடுகிறது.

பண்டைக்காலத்தில் திருக்கேதீச்சரத் திருத்தலத்தைச் சுற்றி நாற்புற வீதிகளும், வீதிகளின் இருமருங்கில் குடியிருப்புகளும், வியாபார நிலையங்களும் இருந்துள்ளன. மாஞ்சோலைகள், தென்னம் பொழில்கள், வண்டு யாழ் செய்யும் மலர்ப்பூங்காக்கள், நிழல் தரு மரங்கள் என்பன தலச் சிறப்பின் செழிப்பிற்கு மெருகூட்டியுள்ளன. இதன் தல விருட்சமாக வன்னிமரம் காணப்படுகின்றது.

இன்று இத்தலம் உட்பிரகாரம், இடைப்பிரகாரம், வெளிப்பிரகாரம் எனும் மூன்று பிரகாரங்களுடன் கூடியதாக மகிழும் வேம்பும் பொழில்தரு தருக்களாகச் சூழ, குளிர்ந்த தென்றல் தவழும் பாலாவிக் கரையோடு மிடுக்கென நிமிர்ந்து காட்சி அளிக்கிறது.

இக்கோயிலில் ஆகம முறைப்படி அனைத்து அம்சங்களும் அமைந்துள்ளமையை இதன் சிறப்பாகக் கொள்ளலாம்.

### (உ) தீர்த்தச் சிறப்பு

திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் தீர்த்தம் பாலாவி என்பதாகும். இதன் சிறப்பினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன் திருக்கேதீச்சரப் பதிகத்திலே தேவாரம் ஒவ்வொன்றிலும் ''பாலாவியின் கரைமேல்'' என்று பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

''பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி'' என்றும் ''பத்தாகிய தொண்டர் தொழு பாலாவி'' என்றும், ''பரிய திரை எறியாவரு பாலாவி'' என்றும் பாலாவியின் சிறப்பைச் சுந்தரமூர்த்தி நாயனார் குறிப்பிடுகிறார். கங்கை, யமுனை, கோதாவரி, காவேரி, குமரித்துறை எனும் இந்தியப் புண்ணிய தீர்த்தங்கள் போல

ஈழத்திருநாட்டில் பாலாவி அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் ஆடி அமாவாசையிலும் அந்தியேட்டித் தினங்களிலும் பலர் பிதிர்க்கடன் செய்வதுண்டு.

மகா சிவராத்திரி காலத்தில் அடியார்கள் பாலாவியில் நீராடி அத்தீர்த்தத்தை வெள்ளிக்குடங்களிலே எடுத்து வந்து கோவிலின் மேற்குப் புறத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள மகாலிங்கத்திற்கு அபிடேகம் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்வர். இத்தீர்த்தம் அடியவர்களின் பாவங்களையும் பிணிகளையும் நீக்கி நற்கதி அருள வல்லது என நம்பப்படுகிறது.

**(ஊ) புதிய கோயில்**

தற்போதுள்ள புதிய ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு 28.06.1903 ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டதாகும். இத் திருக்கோவில் பாலாவித் தீர்த்தத்திற்கு வடக்கே அமைந்துள்ளது.

சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. சந்நிதி திருவாசலில் ஐந்தடுக்கு நிலையினைக் கொண்ட இராஜகோபுரம் கம்பீரமாக மிளிர்கிறது. அம்பாள் கோவில் திருவாசலிற்கு தெற்கே மதிலும் தென்புறத்தேயுள்ள வாசலை ஒட்டி அழகிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கோபுரமும் அமைக்கப்பட்டுள்ளன.

இராச கோபுரத்தின் இடப்பக்கத்தில் பேரொலி எழுப்பும் வெண்கல மணியுடன் கூடிய மணிக்கோபுரம் உள்ளது. கோயிலின் உட்புறத்தே இராசகோபுரத்தின் இருமருங்கிலும் சூரிய, சந்திர சந்நிதிகள் உள்ளன. சனீஸ்வரன் கோயில், நவக்கிரக மண்டபம், சண்டேஸ்வரர் கோயில் என்பனவும் உள்ளன.

விநாயகர், ஆறுமுகசுவாமி, மகாலக்ஷ்மி, பஞ்சலிங்கக் கோவில்களும் உட்பிரகாரத்தில் அமைந்துள்ளன. இராஜ கோபுரத்திற்கு வெளியே இரு புறங்களிலும் விநாயகருக்கும் முருகனுக்கும் இரு கோவில்கள் உள்ளன.




இராஜ கோபுரத்திற்கு முன்பாக மூலஸ்தான சுவாமிக்கும் கொடித்தம்பத்திற்குமான நேர்கோட்டில் சோழர் கால மகாநந்தி ஒன்று அமைந்து காணப்படுகிறது. உட்பிரகாரத்தில் தென்கீழ்த் திசையிலிருந்து சமயகுரவர் நால்வரையும் சேக்கிழாரையும் பிரதிடை செய்துள்ளனர். வடக்குத்திசையில் தேவசபா அமைந்துள்ளது. அங்கு நடராஜர் உள்ளிட்ட பல தெய்வங்களும் உள்ளனர். இவர்களுக்குத் தினசரி பூசையின் போது தீபம் காட்டப்படும். இக்கோயிலிலுள்ள எழுந்தருளித் தெய்வங்கள் மற்றைய கோயில்களில் இல்லாதவாறு பிரமாண்ட அளவுகளில் அமைக்கப்பட்டுள்ளன. மகாமண்டபம், தம்பமண்டபம் என்பன



வற்றை கருங்கற்களினால் அமைக்கும் பொருட்டு தமிழகத்தின் மாமல்ல புரத்தில் இருந்து சிற்பத் தூண்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

### (எ) பூசைகளும் விழாக்களும்

இக்கோயிலில் தினமும் ஆறுகாலப்பூசை நடைபெறுகிறது. பங்குனி உத்தரத்திலும் பிற விசேட தினங்களிலும் சிறப்பான பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. பிரதோஷ விழாவும் செய்யப்படுகிறது. இங்கு ஏனைய ஆலயங்களில் நடைபெறாத இருபூசைகள் நடைபெற்று வருகின்றன. ஒன்று கோமாதா பூசை மற்றையது, திருமுறைப்பூசை என்பனவாம். தினமும் அதிகாலை கோயிலின் உள்வீதியில் கௌரியம்பாள் வாசலில் கோமாதா பூசை நடைபெறும். அதே போல் கோவிலின் இரண்டாம் சுற்றுப் பிரகாரத்தில் பேணி வைக்கப்பட்டுள்ள வேதாகம பொக்கிஷங்களுக்கும் தினசரி பூசை நேரத்தில் பூசை நிகழ்த்தப்படுவது வழக்கம்.




இக்கோயிலின் மகோற்சவம் வைகாசி மாதம் விசாகத்திதிற்கு பத்து நாள் முன்பாக ஆரம்பித்து வைகாசி விசாகத்தன்று தீர்த்தோற்சவம் இடம் பெறும். தீர்த்தத்திற்கு அடுத்த நாள் மௌன உற்சவம் நடைபெறும். இங்கு பஞ்ச ரதங்கள் பவனி வருகின்றன.

இக்கோயிலில் சிவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இக்காலத்தில் இலங்கையில் பல பாகத்திலுமிருந்து வரும் அடியவர்களுக்கு தங்குமிட வசதிகளும் அன்னதானமும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### (ஏ) நூல்கள்

திருக்கேதீச்சரத் தல வரலாற்றை தட்சிணகைலாய மான்மியம், மாந்தைப்பள்ளு என்ற இரு நூல்களிலும் காணலாம். திருக்கேதீச்சரம் பற்றிச் சில பிரபந்தங்களும் பிற்காலத்தில் எழுந்துள்ளன. அவை திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல், திருக்கேதீச்சரப் புராணம், திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத் தமிழ், திருக்கேதீச்சரநாதர் கிள்ளை விடுதூது போன்றவை ஆகும்.



புராதன மகாலிங்கம்



சோழர் கால சோமாஸ்கந்தர்



மாமல்லபுரத்திலிருந்து தருவிக்கப்பட்ட மகாமண்டபத்துக்கான சிற்பத்தூண்கள்





பஞ்ச ரத பவனி

### மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. கேதீச்சரம் எனப் பெயர் வரக் காரணம் யாது?
2. திருக்கேதீச்சரம் சோழர்காலத்தில் எவ்வாறு சிறப்புப் பெற்று விளங்கியது?
3. திருக்கேதீச்சரத்தின் தல விருட்சத்தின் பெயர் என்ன?
4. இக்கோவிலின் மகோற்சவ காலத்தைக் குறிப்பிடுக?
5. திருக்கேதீச்சர வரலாற்றைக் கூறும் நூல்கள் எவை?

### செயற்பாடு

01) திருக்கேதீச்சரத் திருக்கோவில் பற்றி பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளைச் சேகரித்துக் காட்சிப்படுத்தவும்.

### பாடச் சுருக்கம்

- திருக்கேதீச்சரம் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று.
- கேது வழிபட்டமையால் கேதீச்சரம் எனப் பெயர் பெற்றது.
- மண்டோதரி வழிபட்டதும், விஜயன் காலத்துக்கு முந்தியதுமாகும்.
- திருவெண்ணெய் நல்லூர் போன்ற இந்தியத்தலங்களுக்கு ஈடானது.
- சோழ மன்னர்களால் பல திருப்பணிகள் செய்யப்பெற்ற சிறப்புக்குரியது.
- மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைந்தது.
- வைகாசியில் மகோற்சவம் நடைபெறுவது.

## 2. திருக்கோணேச்சரம்




### (அ) அமைவிடம்

இலங்கையின் கிழக்கே திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மலை ஒன்றின் உச்சியில் திருக்கோணேச்சரம் அமைந்துள்ளது.இத்தலம் திருகோணமலைநகரிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள



பிரட்ரிக் கோட்டையினுள்ளே அமைந்துள்ளது. வடக்கே இமாலய மலைக் கயிலாய மலைச் சிகரத்தில் கயிலைநாதன் எழுந்தருளி இருப்பதைப் போல தெற்கே திருகோணமலையில் கோணேச்சரப் பெருமான் அமர்ந்திருந்து அருள் பாலிக்கிறார். இதனால் இக்கோவில் தெட்சண கயிலாயம் எனவும் பெயர் பெறுகிறது.



இராவணன் வெட்டு

கயிலாயத்தைப் பெயர்க்க முற்பட்ட இராவணனைக் காற் பெருவிரலால் ஈசன் அழுத்தினார். இதுபோல கோணேசர் கோயிலிலும் இராவணன் இறைவனை பெயர்க்க முற்பட்டுத் தோல்வியுற்றான். இந்தச் சம்பவத்தை விளக்கும் இராவணன் வெட்டு இன்றும் கோயிலில் காணப்படுகிறது.

### (ஆ) பண்டைய வரலாறு

திருக்கோணேச்சரர் கோயிலின் புராதன ஆலயம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இன்று கோயில் அமைந்துள்ள மலையின் அடிவாரத்தில் இருந்ததென நம்பப்படுகிறது. அக்கோயில் கி.மு 308இல் நிகழ்ந்த கடற்கோளினால் மூழ்கிவிட்டதாக தெனன்று என்னும் வரலாற்று ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.




ஆழ்கடலில் புதைந்துள்ள ஆலயத்தின் பகுதிகள்

கோணேசர் மலையின் அடியில் ஆழ்கடலுக்கு எதிரே மலைக்குகை போன்று பண்டைய கோயிலின் கர்ப்பக்கிருகத்தின் ஒரு பகுதி இன்னமும் எஞ்சியுள்ளது. அக்கோவிலின் மிகுதி சமுத்திரத்தின் அடியில் உள்ளதென 1961 இல் ஆழ்கடல் ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர் மைக் வில்சன் கூறுகிறார்.

கோணேச்சரம் இராவணனால் வழிபடப்பட்டு வந்ததெனவும், இங்கு இராவணன் தன் தாயாருக்கு சிவலிங்கம் ஒன்று பெற விரும்பிப் பெயர்த்த மலை தட்சிண கயிலாயம் என்னும் கோணமாமலை என தட்சிண கயிலாய புராணம் கூறுகிறது. இதற்கு ஆதாரமாக இராவணன் வெட்டு என்ற பெயருடைய மலைப்பிளவு ஒன்று இன்றும் பார்க்கக்கூடியதாக உள்ளது.

கடலுள் மாண்டு போன பழைய கோயிலுக்குப் பதிலாக புதிய கோயில் ஒன்று ஏழாம் நூற்றாண்டு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் விளங்கியதாக வரலாறு கூறுகிறது. இக்கோயிலுக்கு சோழ, பாண்டிய, ஆரியச் சக்கரவர்த்திகள் ஆதரவு நல்கினர். இக்கோயிலின் திருப்பணிகளைக் குளக்கோட்ட மன்னன் செய்வித்தான் என்று கூறப்படுகிறது. பின் அது பறங்கியரால் அழிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

1624 சித்திரைப் புத்தாண்டு நாளில் கொன்சன்ரையின் தலைமையில் கோயிலுக்குள் புகுந்த போர்த்துக்கேயர் கோயிலில் இருந்த பெறுமதி மிக்க பொருட்களைக் களவாடிய பின் கோயிலையும் இடித்தனரென வரலாறு கூறுகிறது.



போர்த்துக்யோர் வரைந்த ஆலயத்தின் படம்

போர்த்துக்கேயர் அழித்த கோயிலில் ஆயிரங்கால் மண்டபமும் பெரியதொரு தீர்த்தக் கேணியும் வேறு பல மண்டபங்களும் இருந்ததாக அவர்கள் வரைந்து வைத்த படம் ஒன்றிலிருந்து தெரிய வந்துள்ளது.



அழிக்கப்பட்ட கோயிலின் கற்களைக் கொண்டு பாபநாசத் தீர்த்தக் கேணியையும் தூர்த்தனர் என வரலாறு சொல்கிறது. கோயில் அழிக்கப்படும் போது பீதியும் துயரும் உற்ற பக்தர்கள் சில விக்கிரகங்களை எடுத்து மறைத்து வைத்தனர். பின் புதிய கோயில் அமைக்கப்படும் போது பக்தர்களால் ஒழித்து வைக்கப்பட்ட விக்கிரகங்கள் கோயிலுக்கு எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன. அவற்றுள் விநாயகர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பார்வதி, அன்னம் முதலான வார்ப்புப் படிமங்களும் கருங்கல்லில் அமையப்பெற்ற விஷ்ணு, மகாலெட்சுமி முதலான திருவுருவங்களும் குறிப்பிடத்தக்கவை. கோயிலின் தீர்த்தக் கேணி புதிய நிலையில் தீர்த்தக் கிணறாகவும் அமைக்கப்பட்டது.

## (இ) ஆலயச்சிறப்பு

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற திருத்தலங்களில் இது குறிப்பிடத்தக்க ஒரு சிவாலயமாகும். திருக்கோணேச்சரம் இயல்பாகவே தெய்வீகமாகத் தோன்றிய ஒரு தலம். இத்தலத்தின் மூல இலிங்கமும் தான் தோன்றி இலிங்கமாகும்.



ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இத்தலம் மீது தேவாரப்பதிகம் பாடியுள்ளார். அருணகிரிநாதரும் தமது திருப்புகழில் இவ்வாலயத்தைப் போற்றியுள்ளார்.

கடலுக்கு அடியிலே, கடலால் கொள்ளப்பட்ட திருக்கோணநாதர் கோயில் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கமைய தற்போதும் நித்திய பூசையின் போது கடலுக்கு அடியிலுள்ள கோணேசப்பெருமானுக்கு மலை உச்சியிலிருந்து பூசை நடைபெறுவதை நாம் காணலாம். அத்துடன் கடற்றொழிலுக்குச் செல்வோர் செங்குத்தான மலை அடிவாரத்தில் உறையும் இறைவனைத் தமது வள்ளங்களில் அண்மித்து மலர் தூவி வழிபட்ட பின் தொழிலுக்குச் செல்வதை மலை உச்சியிலிருந்து நாம் காண முடியும்.

### (ஈ) மூர்த்திச் சிறப்பு





இவ்வாலயத்தின் இறைவன் பெயர் திருக்கோணேச்சரர். இறைவி பெயர் மாதுமை அம்பாள். தல விருட்சம் கல் ஆல மரம். தற்போதுள்ள கோவிலை அடுத்து வடமுனையில் பாறை யினுள் வேர் வைத்து இந்த ஆலமரம் செழிப்பாக வளர்ந்து ள்ளமையைக் காணலாம். இக் கல்லாலில் அடியவர்கள் தம் நேர்த்திகளை வேண்டி, துணியில் நாணயத்தை முடிந்து செல்வதும் பின் அக்காரியம் நிறைவேறியதும் நேர்த்திகளைப் பூர்த்தி செய்வதும் இங்கு நடைபெறுகின்றன. இவை பேரருட் கடலான இம்மூர்த்தியின் சிறப்பையே பறை சாற்றுகின்றன.

### (உ) தலச் சிறப்பு


தல விருட்சம்

குறிஞ்சியும் முல்லையும் நெய்தலும் ஒன்று சேர்கின்ற திரிகோணமான மலைகளில் ஒன்றில் இத்தலம் அமைந்துள்ளது. திரிக்குணமலை, திருக்குணாமலை, திருமலை, தென்கைலாயம், கோகர்ணம், திரிகூடம், மச்சேஸ்வரம் என்னும் பிற பெயர்களையும் இத்தலம் கொண்டுள்ளது. இத்தலத்தில் குடிகொண்டுள்ள

இறைவனின் பெயராலேயே இத்தலமும் இத்தலத்தின் பெயராலேயே இம்மாவட்டமும் அழைக்கப்படுகின்றமை இத்தலத்திற்கு மேலும் சிறப்பைத் தருகிறது.

**(ஊ) தீர்த்தச்சிறப்பு**



பாபநாசத் தீர்த்தம்

இத்தலத்தின் தீர்த்தம் பாபநாசம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு தீர்த்தமாடுவோரின் பாவங்களை நீக்கும் என்ற தன்மையினால் அது இப்பெயரைப் பெற்றது என்று நம்பப்படுகிறது. பாபநாச தீர்த்தக் கிணறு இருக்கும் இடத்திற்கு தற்போது அடியவர்கள் சென்று வர முடியாது மூடப்பட்டுள்ளமை எமது தவக்குறைவே என அறிஞர்கள் அங்கலாய்க்கின்றனர். எனினும் மகோற்சவ தீர்த்தத் திருநாளில் குறித்த ஒரு சில பக்தர்கள் மட்டும் அங்கு சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது ஓரளவு ஆறுதல் தருகிறது. அற்புதமான இத்தீர்த்தம் எமது பிறவிப்பிணியறுக்க வல்ல மாமருந்து என்றே அடியவர் குறிப்பிடுவர்.

**(எ) பூசைகளும் விழாக்களும்**

தற்போது இக்கோயிலில் தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோவிலில் மகோற்சவம் பங்குனி உத்தரத்திலே தொடங்கி பதினெட்டு நாட்களுக்கு நடைபெறும். 2003ம் ஆண்டு தொடக்கம் இங்கு தேர்த்திரு விழா இடம் பெறுகின்றது. மூன்று இரதங்கள் பவனி வருகின்றன. உற்சவ காலங்களில் புராதன சோழர்கால சோமாஸ்கந்தரது திருவுருவம் வலம் வருகின்றமை சிறப்பானது. மகாசிவராத்திரி விழாவையடுத்து திருக்கோணேச்சரப் பெருமான் மாதுமை அம்பாளோடு திருகோணமலை நகரை பவனி வரும் வேளையில் அங்கு இடம்பெறும் பூசை வழிபாடுகளையும் ஏற்று ஆலயத்தை வந்தடைவார்.







**தேர்த்திருவிழா**

### (ஏ) நூல்கள்

கோணேசர் கல்வெட்டு என்ற நூல், திருக்கோணேச்சரத்தின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் கவிதையிலும், உரை நடையிலும் அமைந்துள்ளது. இதைவிட தட்சிணகைலாய புராணம், திருக்கோணாசல புராணம், சீர்பாதகுல வரலாறு, மட்டக்களப்பு மான்மியம், திருகோணமலைத் திருவுருவங்கள், கோட்டை வாயிற் கல்வெட்டு, திருக்கோணேச்சரம் போன்ற நூல்கள் இக்கோவிலின் வரலாற்றுக்குறிப்புகளைத் தருகின்றன.

இவற்றை விட திருக்கோணேச்சர ஆலய வரலாறு, திருக்கோணமாமலை, கோணகிரீசர் அட்டகம், திருக்கோணமலை அந்தாதி முதலியவற்றிலும் கோணேஸ்வரர் போன்ற பிரபந்தங்களிலும் இவ்வாலயத்தின் வரலாற்றைக் காணலாம். திருக்கோணேச்சர தேவாரத் திருப்பதிகம், கோணேஸ்வரர் அகவல் முதலியன இக்கோயில் மீது எழுந்த இலக்கியங்கள் ஆகும்.

### மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. திருக்கோணேச்சர ஆலய இறைவன், இறைவி பெயர் யாது?
2. திருக்கோணேச்சரத் தல விருட்சம் யாது?
3. திருக்கோணேச்சரத் தீர்த்தம் யாது?
4. இவ்வாலயத்தின் மீது தேவாரம் பாடிய நாயனார் யார்?

### செயற்பாடு

01) திருக்கோணேச்சரம் பற்றிப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வந்த ஆக்கங்கள் கட்டுரைகளைத் தொகுத்து ஒரு நூல் வடிவாக்கி வகுப்பில் காட்சிப்படுத்தவும்.

### பாடச்சுருக்கம்

- திருக்கோணேச்சரம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பிரட்றிக் கோட்டையின் உள்ளே அமைந்துள்ளது.
- இக்கோவிலின் மூல மூர்த்தி சிறிய வடிவிலான சுயம்புலிங்கமாகும்.
- புதிய ஆலயத்திற்கு அருகில் ஆழ்கடலின் அடியில் புராதன கோயிலின் எச்சம் ஒன்று உள்ளது.
- இக்கோவிலின் தீர்த்தம் பாபநாசம், தலவிருட்சம் கல்லால மரம்.

## 3. பொன்னம்பலவாணேச்சரம்



### (அ) ஆலய அமைவிடம்

இலங்கையின் தலைநகர் கொழும்பில் கொச்சிக்கடைப் பகுதியில் முற்றிலும் கருங்கல்லினால் சிற்ப வேலைப்பாடுகள் கொண்டு கட்டப்பட்டது இவ்வாலயம். இலங்கையில் முற்றிலும் கருங்கல்லினால் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரே ஆலயம் கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆலயமே ஆகும்.



கருங்கல்லில் பொளிந்த சிற்பங்கள் கொண்ட தூண்கள் கோயிலின் உள்ளே உள்ளன. கருவறையும் அதன் உட்பிரகாரக்கூரை என்பனவும் கூட கருங்கல்லினாலேயே தளம் போட்டுக் கட்டப்பட்டுள்ளன. இக்கோயிலின் கிழக்கு, மேற்கு ஆகிய இரு வாயில்களிலும் உயர்ந்த கருங்கற் கோபுரங்கள் காட்சி அளிக்கின்றன.

### (ஆ) கோவில் வரலாறு

இவ்வாலயம் பொன்னம்பல முதலியார் என்பவரால் கட்டப்பட்டது. அவர் வாழ்ந்த காலத்தில் கொழும்பில் சைவாகம முறைப்படி அமைந்த கோயில் எதுவும் இல்லாத குறை காணப்பட்டது. இதனால் அங்கு வாழ்ந்த சைவ மக்களுக்கென சிற்ப சாஸ்திர ஆகம முறைப்படி அமைந்த கோயில் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் பொன்னம்பல முதலியாரின் மனதில் குடிகொண்டது. இவ்வெண்ணத்தை நிறைவேற்றும் நோக்குடன் இருந்த முதலியாரின் கனவில் ஒருநாள் தெய்வ அங்கீகாரம் கிடைத்தது. அதன் பின் அவரின் கோவில் கட்டும் எண்ணம் பேரார்வமாய் மாறியது.

சைவசமயப் பற்றுமிகுந்த முதலியார் கொழும்பு கொச்சிக்கடைப்பகுதியில் கோயில் கட்டுவதற்கென ஐந்து ஏக்கர் நிலத்தை வாங்கிக் கோயில் பணியை ஆரம்பித்தார். தென்னிந்தியக் கோயில்களுக்கு நிகரான கோயிலாக அமைய வேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக இந்தியாவிலிருந்தே கட்டிடக்கலைஞர்களை வரவழைத்துக் கோயில் வேலைகளைத் தொடங்கினார்.

பொன்னம்பலவாணேச்சர் கோயிலை இரண்டு வருடங்களில் கட்டிமுடித்ததோடு அதன் இடதுபக்கத்தில் அம்மனுக்கும் ஒரு கோயில் அமைப்பித்தார். ஆரம்பகாலக்கோயிலின் மூலஸ்தானத்தில் மகாலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது.

பொன்னம்பலமுதலியார் அவர்களால் கட்டப்பட்ட இத்தலம் பின் அவரின் மைந்தன் சேர். பொன். இராமநாதன் அவர்களால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. தென்னிந்தியாவில் பல்லவர், சோழர், நாயக்கர்களினால் கட்டப்பட்ட கோயில்களைப் பார்த்த இராமநாதன் அவர்கள், அவற்றுக்கு நிகராக இக்கோயிலையும் அமைக்க அவாவுற்றார். எனவே தென்னிந்தியாவிலிருந்து வருவித்த சிற்பக் கலைஞர்களைக் கொண்டு கோயிற்பணிகளை மேற்கொண்டார்.


கற்கோயில் கட்டும் பேரார்வமுள்ள இராமநாதன் அவர்கள் 1907இல் கருங்கற்கட்டட வேலைகளை ஆரம்பித்தார். கட்டுமானப் பணிகளைத் தாமே நேரில் நின்று தொழிலாளரோடு தொழிலாளராகச் செயற்பட்ட சிவப்பணி அவரின் எண்ணத்தை உயர்த்தியது எனலாம். இவர் ஆரம்பித்த கருங்கல்லால் கோவில் கட்டும் பணி ஆறு வருடங்களின் பின்னே அதாவது 1912இல் முற்றுப்பெற்றது. வியாங்கொடையிலிருந்து தருவிக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு இன்று நாம் காணும் அழகிய கோயில் நிர்மாணிக்கப்பட்டது.

### (இ) கோயிலின் அமைப்பு

கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசுவரர் ஆலயம் ஆகம விதி தவறாத முறையில் அமைக்கப்பட்ட ஓர் ஆலயமாகும். கருவறையில் சிவலிங்கம் (பொன்னம்பல வாணேஸ்வரர்) பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. கருவறைக்கு முன்புறம் அர்த்த மண்டபமும் அதற்கு முன்பாக மகாமண்டபமும் உள்ளது. கருவறை யிலுள்ள சிவலிங்கத்திற்கு நேர்கோட்டில் மகாமண்டபத்திற்கு முற்புறமாக நந்தி, பலிபீடம், கொடித்தம்பம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.



ஐயன் ஆலயத்திற்குத் தெற்குப்புறமாக அம்மனுக்கு ஓர் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. இவ்வாலயத்திற்கு மூன்று தளம் கொண்ட கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் அம்மன் சிவகாமசௌந்தரி எனப்படுவார். சுவாமிக்கு அமைக்கப்பட்ட ஆலயமும் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்னும் ஒழுங்கில் அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.



சிவகாமி ஆலயத்திற்கு அருகில் பள்ளி அறையும் அதனருகே கல்யாண மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் கிழக்கு வாசலில் இறைவன் சந்நிதிக்கு நேரே முன் பக்கமாக ஐந்து அடுக்கு இராச கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரத்தில் சிவனின் திருவிளையாடலும், அடியவர் பக்தியும் கலைநுட்பத்துடன்

செதுக்கப்பட்டுள்ளமை கண்கொள்ளாக்காட்சியாகும். இராச கோபுரத்தைத் தாண்டி முன்பக்கம் முன் பிரகாரத்தில் பன்னிரு இராசிகளும் செதுக்கப்பட்டுள்ளன.


பொன்னம்மபலவாணேச்சுரர் கோயிலின் உட்பிரகாரத்தில் கணேசர், சோமாஸ்கந்தர், பெருமாள், விஷ்ணு, பஞ்சலிங்கம், சுப்பிரமணியர், சண்முகர், ஞானவைரவர், சுவர்ணவைரவர், நவக்கிரகங்கள், சனிபகவான் ஆகியோருக்குத் தனிக்கோயில்கள் உள்ளன. இவ்வாலயத்தின் தலவிருட்சமாக மாதுளை மரம் விளங்குகிறது.

### (ஈ) பூசைகளும் விழாக்களும்

இங்கு தினமும் ஆறுகாலப்பூசை நடைபெறும். அத்துடன் தினமும் காலையும் மாலையும் பூசைகளும், நித்தியாக்கினி வளர்க்கப்பட்டு நித்திய உற்சவமும் நடைபெறுகின்றன. நித்தியாக்கினி என்பது இக்கோவிலின் அக்கினி குண்டத்தில் எப்போதும் நெருப்பு இருக்கச் செய்வதனால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. நித்திய உற்சவத்தின் போது சுவாமி அம்பாளோடு சிறிய தேரில் உலா வருவார். மாதப்பிறப்பன்று மாதச்சங்கராந்தித் தீர்த்தமும், பௌர்ணமி தினத்தில் ஸ்ரீசக்கர பூசையும் நடைபெற்று திருவுலாவும் இடம்பெறும்

நித்தியோற்சவம், மாதோற்சவம், வருடோற்சவம், மகோற்சவம் ஆகியன இங்கு ஆகம முறைப்படி சிறப்புற நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இக்கோவிலின் வருடாந்த மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் தீர்த்தம் வரக்கூடியதாக அதற்கு ஒன்பது நாட்களுக்கு முன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறுகிறது. இங்கு ஐந்து இரதங்கள் பவனி வருகின்றன.

**கருங்கற்களினால் அமையப் பெற்ற மண்டபங்கள்**







நுழைவாசல் கோபுரம்



கருங்கற் தூண்களில் இடம்பெறும் சிற்பங்கள்





இரத உற்சவம்



ஸ்ரீ சுவர்ண புஷ்கரணித் தீர்த்தம்



இவ்வாலயத்தீர்த்தம் **ஸ்ரீ சுவர்ண புஷ்கரணி** ஆகும். அம்பாள் உற்சவம் ஆடிப்பூரத்திற்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி பூரத்திலன்று முடிவடையும்.

மணவாளக் கோலத் தினமான தைப்பூசத்தினத்தன்று சிவன், அம்பாள் ஆகியோருக்குத் தனித்தனி 1008 சங்காபிஷேகமும் மாலையில் உற்சவமும் நடைபெறும். கார்த்திகைக் கடைசி சோமவாரத்தினத்தன்று சிவனுக்கு 1008 சங்காபிஷேகமும் சுவாமி அம்பாள் உற்சவம் என்பனவும் நடைபெறும். நடேசர் அபிஷேக நாட்களில் ஆருத்திரா உற்சவம் சிறப்பானது.

கந்தசஷ்டி காலத்தில் தினமும் அபிஷேகம், பூஜை, யாகபூஜை, திருவுலா நடைபெறும். நவராத்திரி காலத்தில் இடம்பெறும் யந்திர பூஜை, கொலு பூஜை என்பனவும் குறிப்பிடத்தக்கன. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும். கடைசிச் சனி, கிருஷ்ண ஜெயந்தி உற்சவம், வைகுண்ட ஏகாதசி நாட்களில் மகாவிஷ்ணு உற்சவம் நடைபெறும். ஆகம சாஸ்த்திர ரீதியிலான கிரியைகள் கொண்ட இவ்வாலயம் ஈழத்தின் ஓர் பொக்கிஷம் என்பது மறுப்பதற்கில்லை.

### மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. பொன்னம்பலவாணேஸ்வரம் எங்கு அமைந்துள்ளது?
2. நித்தியாக்கினி என்பதால் நீர் யாது விளங்குகிறீர்?
3. இக்கோயிலின் மகோற்சவம் எப்போது நடைபெறும்?
4. பொன்னம்பலவாணேஸ்வர ஆலய மணவாளக் கோலத் திருநாள் எது?

### செயற்பாடு

01) பொன்னம்பலவாணேஸ்வர ஆலய பூஜைகளையும் நடைபெறும் காலங்களையும் அட்டவணைப்படுத்தி வகுப்பறையிற் காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- பொன்னம்பலவாணேஸ்வரம் பொன்னம்பலம் முதலியாரால் கட்ட ஆரம்பிக்கப்பட்டு, பின் அவரின் புதல்வர் சேர்.பொன். இராமநாதனால் பூர்த்தி செய்யப்பட்டது.
- இங்கு தினமும் ஆறு காலப்பூஜைகள் நடைபெறுகின்றன.
- பொன்னம்பலவாணேஸ்வரத்தில் நித்தியோற்சவம், மாதோற்சவம், வருடோற்சவம், மகோற்சவம் என்பன நடைபெறுகின்றன.

# 2 விநாயகர் ஆலயம்

## மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்

### (அ) ஆலய அமைவிடம்



இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு நகர மத்தியிலிருந்து வடக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் மாநகரசபை எல்லையி-னுள்ளே அமிர்தகழி என்ற ஊரில் இத்தலம் அமைந்திருக்கிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்த தலம் மாமாங்கேஸ்வரம். இத்தலத்தின் கர்ப்பக்கிருகத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் விநாயகர் அங்கியுடனே சிவலிங்கம் காட்சி தருவதால் அடியார்களால் மாமாங்கப்பிள்ளையார் என்றே மூல மூர்த்தி போற்றப்படுகிறார்.

மாமாங்கேஸ்வரர் ஆலயம் தென்னை, ஆல், அரசு, வேம்பு, குருந்து, கொக்கட்டி முதலான அடர்ந்து செறிந்த விருட்சங்களின் நடுவே அமைதியான சூழலில் குளிர்ந்த நெய்தல் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. இக்கோயிலின் நேர்வாசலில் குருந்த மரம் ஒன்று உள்ளது. கோயிலுக்கும் அதன் வடபுறத்தேயுள்ள அமிர்தகழி என்ற ஊர் மனைக்கும் இடையில் தாமரைப் பூக்கள் நிறைந்த மாமாங்கத் தடாகம் அமைந்துள்ளது. இதுவே இவ்வாலயத்தின் தீர்த்தக் குளமாகும்.

### (ஆ) கர்ணபரம்பரைக் கதை

மாமாங்கேஸ்வரர் ஆலயத்தினைப் பற்றி ஐதீகமான கர்ணபரம்பரைக் கதைகள் தொன்று தொட்டே நிலவி வழங்குகின்றன. இவை இராமாயணத்துடன் தொடர்புடையன. இராமபிரான் இராவணனுடன் யுத்தமிட்டு சீதையைச் சிறை மீட்டு மீண்டு செல்லும் வழியில் இத்தலத்தில் வந்து தங்கியிருந்தார். பஞ்சவடி போன்றமைந்து, காடு நிறைந்த இப்பகுதியில் இலிங்க பூசை செய்யக்கருதி அனுமானை விந்திய மலைக்கு அனுப்பி சிவலிங்கம் கொண்டுவரச் சொன்னார். அனுமான் வரத்தாமதமாகவே இராமபிரான் மண்ணினால் ஒரு இலிங்கத்தைச் செய்து அதற்கு அபிடேகம் செய்வதற்காக தனது கோதண்டமாகிய வில்லை நிலத்தில் ஊன்றி நீர் பெற்று அபிஷேகம் செய்து பூசையை முடித்தார். கோதண்டம் ஊன்றிய இடம் குளமாகியது. பின்னர் அனுமான் கொண்டு வந்த இலிங்கமும்

பூசனை செய்யப்பெற்று இராமனால் ஆக்கப்பெற்ற திருக்குளத்தின் நடுவே புதைக்கப்பெற்றது. இதனால் இக்குளத்திற்கு புனிதத்தன்மை ஏற்பட்டது.

**மற்றொரு கதை :** மாமாங்கத்தில் இராமபிரானால் உருவாக்கிய இலிங்கம் பெயர்க்க முடியாமல் நிலைத்துவிட்டது. பின்னர் காடு வளர்ந்து மூடிவிட்டது. பிற்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த வேடன் ஒருவன் கனவில் இறைவன் தோன்றிக் கூறியதாகவும் அவன் காட்டை வெட்டிக் கொத்துப் பந்தலிட்டு வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆதலின் இவ்வாலயம் மிகவும் தொன்மையானது என்று சான்றுகள் காட்டுகின்றன.


### (இ) வரலாறு

மாமாங்கேஸ்வரம் சுயம்பு இலிங்கத்தைக் கொண்ட ஆலயம் ஆகும். சுயம்பு இலிங்கங்கள் மிகவும் புராதன வரலாற்றைக் கொண்டன. எனவே இவ்வாலயமும் மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஸ்ரீ இராமேஸ்வரத்தில் உள்ள இலிங்கமும் மாமாங்கேஸ்வர இலிங்கமும் இராமபிரானால் உருவாக்கப்பட்டன என்ற ஐதிகம் நிலவுகிறது. இதனால் மாமாங்கேஸ்வரம் இராவணன் காலத்தைய புராதனமானது என நம்பப்படுகின்றது. காரணம் இராவணனும் இராமபிரானின் காலத்தில் இருந்ததாக இராமாயண இதிகாசம் கூறுகிறது.

### (ஈ) ஆலய அமைப்பு

கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், முன்மண்டபம் என்பவற்றோடு கம்பீரமாக இவ்வாலயம் காட்சியளிக்கிறது. இவ்வாலயத்தில் நவக்கிரகங்களுக்கும் தனியான கோயில் அமைந்துள்ளது. 1880ஆம் ஆண்டில் தான் தற்போதுள்ள அமைப்பை இவ்வாலயம் பெற்றுள்ளதாக அறிய முடிகிறது. 1888இல் புதிய நிர்வாக சபை உருவாக்கப்பட்டு ஆலயம் விஸ்தரிக்கப்பட்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.



1963ஆம் ஆண்டு கோயிலில், சில புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது. 1999இல் மேலும்

சில திருப்பணிகள் நடைபெற்றன. தற்போது இவ்வாலயத்திற்கு இராஜ கோபுரம் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

அடியார்கள் தங்குவதற்காக இங்கே கட்டப்பட்டிருந்த இராசையா நொத்தாரிசு மடம், கதிரைவேற்பிளை மடம் என்பன இன்று அழிந்து போய்விட்டன. இன்று தண்ணீர்பந்தல் மடம், தொண்டர் மடம் என்பனவே உள்ளன.

### (உ) மாமாங்கத் தீர்த்த மகிமை



கோயிலுக்கும் அமிர்தகழி என்ற ஊருக்குமிடையில் அமைந்துள்ள மாமாங்கத் தீர்த்தம் சிறிதாயினும் இயற்கையழகும் மகிமையும் மிக்கதாகும். இத்தீர்த்தம் இராமபிரானால் ஆக்கப்பெற்றதோடு விந்திய மலையிலிருந்து அனுமானால் கொண்டுவரப்பெற்ற புனித இலிங்கம் நடுவில் புதைக்கப்பெற்றது என்று கூறும் பெருமைக்குரியது. அந்தப் புனித இலிங்கத்தின் மகத்துவத்தினால் அடியார்களின் பாவமனைத்தையும் போக்கும் திருவருட்சக்தி இக்குளத்திற்குக் கிடைத்ததெனக் கூறப்படுகிறது.

ஆடி அமாவாசைத் தினத்தன்று கீரிமலையில் தீர்த்தமாடுதல் போன்று மாமாங்கத் தீர்த்தமாடுதலும் சிறப்பு என்பர். மேலும் காசியிலிருந்து வந்த முனிவர் ஒருவர் கங்கை, யமுனை, காவிரி, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, தாமிரபரணி, சேது முதலிய ஒன்பது தீர்த்தங்களை தனது கமண்டலத்தில் கொண்டு வந்து இக்குளத்தில் கலந்தார் என்பதால், ஒன்பது மங்கையர் பெயரையிட்டு இது மாமங்கை என்று அழைக்கப்பட்டதெனவும் ஒரு கதையுண்டு. இத்தீர்த்தத்தில் ஆடகசவுந்தரி என்ற இளவரசி நீராடி பேரழகையும் தான் விரும்பிய பேற்றையும் பெற்றாள் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

மாமாங்கத் தீர்த்தக்குளம் அதனை அடுத்திருந்த மாமங்கை நதி, அனுமார் தீர்த்தம், காக்கைத் தீர்த்தம், பழையாறு நற்றண்ணீர்மடு, பாலமீன்மடு, மட்டிக்கழி ஓடை எனப்படும் கிண்ணியடித்தோணா முதலிய ஏழு தீர்த்தங்களுடன் தொடர்பு பட்டுள்ளது. மாமாங்கத் தீர்த்தத்தில் மேற்குப்புறமாயுள்ள ஒருபகுதி அனுமார் தீர்த்தமென வழங்கப்படுகிறதென்பர். ஆலய தல விருட்சமாகக் குருந்த மரம் காணப்படுகிறது.

## (ஊ) பூசைகள், விழாக்கள்

இவ்வாலயத்தில் தினமும் மூன்று வேளைகளில் பூசை நடைபெறுகிறது. மகோற்சவம் ஆடிமாதத்தில் பத்து நாட்கள் நடைபெறும். ஆடி அமாவாசைக்குப் பத்துத் தினங்கள் முன்னதாக திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். தீர்த்தோற்சவத்துக்கு முதல் நாள் தேர்த்திருவிழா இடம்பெறும். இங்கு ஒரு தேர் வலம் வருகின்றது. திருவிழாக்களின் போது சிவன், சக்தி, பிள்ளையார் ஆகிய மூன்று மூர்த்திகளும் ஒருமித்து வருவதும் அதே கோலத்துடன் இடப வாகனத்தில் தீர்த்தோற்சவத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

## (எ) நூல்கள், பிரபந்தங்கள்

மாமாங்கேஸ்வரத்தின் மீது புலவர் பலர் நூல்களை அருளியுள்ளனர். வித்துவான் சரவணமுத்து அவர்களால் மாமாங்கேஸ்வரர் கீர்த்தனை, மாமாங்கேஸ்வரர் பதிகம் என்பனவும், செ. பூபாலபிள்ளை அவர்களால் மாமாங்கேஸ்வரர் பதிகம் என்பதும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் மாமாங்கேஸ்வரர் பதிகம் என்பதும், பூ. சின்னையா அவர்களால் மாமாங்கப் பிள்ளையார் விருத்தம் என்பதுவும் மாமாங்கேஸ்வரத்தின் மீது எழுந்த நூல்கள் ஆகும்.



மூலவர்



தலவிருட்சம் - குருந்த மரம்







தேர் உற்சவம்

## மேல்வரும் வினாக்களுக்கு விடைதருக

1. மாமாங்கப்பிள்ளையார் கோயில் எங்கே அமைந்துள்ளது ?
2. மாமாங்கேஸ்வரம் மாமாங்கப் பிள்ளையார் என அழைக்கப்படக் காரணம் யாது ?
3. மாமாங்கேஸ்வரத்தின் மீது எழுத நூல்கள் யாவை ?

## செயற்பாடு

1) உங்கள் பிரதேசத்திலுள்ள ஆலயம் ஒன்றின் அமைப்பினைச் சென்று அவதானிக்குக. அதனைக் கோட்டுப்படமாக வரைக. (இதில் கோயிலின் அமைப்பு முழுமையாக இடம்பெறுவதைக் கவனிக்கவும்) பின் அதனை வகுப்பறையில் காட்டுப்படுத்துக.

## பாடச் சுருக்கம்

1 மாமாங்கேஸ்வரர் ஆலயம் மட்டக்களப்பு அமிர்தகழியில் அமைந்துள்ளது.
2 இராமர் சீதையை மீட்டுச் செல்லும் வேளையில் இக்கோயிலில் தங்கி பூசை செய்துள்ளார்.
3 மாமாங்கேஸ்வரம் சுயம்புலிங்க ஆலயமாகும்.
4 இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆடி மாதத்தில் பத்துத் தினங்கள் நடைபெறுகின்றது.

# 3 முருகன் ஆலயங்கள்

## 1 திருக்கோயில் சித்திர வேலாயுதர் ஆலயம்

### (அ) ஆலய அமைவிடம்



இலங்கையின் கிழக்கே அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் என்னும் ஊரில் இத்தலம் அமைந்துள்ளது. பண்டைய நாளில் இவ்விடம் நாகர்முனை என்று அழைக்கப் பட்டது. இவ்வாலய முன்றலில் வெள்ளை நாவல் மரங்களும் நன்நீர்ச் சுனைகளும் உள்ளன. அதனால் இத்தலம் வெள்ளை நாவல் பதி என்றும் அழைக்கப்படுகிறது.

### (ஆ) கர்ணபரம்பரைக்கதை

இக்கோயிலிற்கு பல கர்ணபரம்பரைக்கதைகள் உள்ளன. அவற்றில் ஒன்று வருமாறு:

சூரன் போரிலே முருகப்பெருமானது வேல் சூரனை வதம் செய்தபின் அதிலிருந்து கிளம்பிய ஓர் ஒளி வாகூர மலையை இருகூறாக்கி மூன்று குன்றங்களையும் அகழ்ந்தது. பின் வேகம் தணிந்து நாகர் முனை வெள்ளை நாவல் மரத்திலே வந்து தங்கியது. வெள்ளை நாவல் மரத்திலே ஒளிவீசும் தங்க சித்திர வேலொன்று பிரகாசிப்பதைக் கண்ட வேடுவர் குதூகலித்து அவ்விடத்திலேயே ஒரு கொத்துப் பந்தலிட்டு சித்திர வேலாயுதரை வழிபடலாயினர்.

### (இ) வரலாறு

சித்திர வேலின் சிறப்பைக் கேள்வியுற்ற குளக்கோட்டன், பரராசசிங்கன் எனும் அரசர்கள் கொத்துப் பந்தலிலிருந்த முருகனுக்கு ஆலயமொன்றை அமைத்ததுடன் ஆலயப் பணிக்கென மக்களையும் குடியேற்றி மானியங்களும் வழங்கினர். தமிழரின் இரண்டாம் படை எழுச்சியின் போது(கி.மு.103ல்) இங்கு வந்த சோழர் எழுவர் இக்கோயிலைக் கல்லினாற் கட்டி முடித்தனர் என்பது வரலாறு. வேடுவர்களின் கொத்துப்பந்தலில் வடக்கு முகமாக நோக்கியிருந்த வேலானது புதிய கற்கோயிலில் கிழக்கு முகமாகத் தானே திரும்பி விட்டது. இவ்வாறு திரும்பிய காரணத்தால் நாகர்முனைக் கோயில் ''திரும்பிய கோயில்'' என்றும் அது காரணமாகத் திருக்கோயில் என்றும் அழைக்கப்படலாயிற்று.

மட்டக்களப்பை பிரசன்னசித்து ஆட்சி செய்த காலத்தில் கலிங்ககுமாரன் புவனேயபாகு மக்கட்பேறு வேண்டித்தன் மனைவியுடன் தலயாத்திரை செய்து

வந்தான். வரும் வழியில் திருக்கோயில் ஆலயத்தின் சிறப்பைக் கேள்வியுற்று அங்கு சென்றான். மட்டக்களப்பு அரசனின் வேண்டுதலுக்கு இசைந்து அக்கோயிலை இந்திய சிற்பிகளைக் கொண்டு பெருங்கோயிலாக அமைத்துக் கொடுத்தான் என்பது வரலாறு.

இதற்குக் கைம்மாறாக மன்னன் பிரசன்னசித்து தன் இராச்சியத்தின் தென்பகுதியை புவனேயபாகுவிற்கு உவந்தளித்தான் என்றும் கூறப்படுகிறது. இது கி.பி.28.இல் நடைபெற்றதாக ஐதீகம். காலப்போக்கில் இது உன்னரசுகிரி எனப்பெயர் பெறலாயிற்று.

திருக்கோயில் சித்திரவேலாயுதர் அருளால் புவனேயபாகுவிற்கு மேகவர்ணன் என்ற மகன் பிறந்தான். தந்தைக்குப் பின் மேகவர்ணன் மநுனேயபாகு என்ற பெயரோடு உன்னரசுகிரியை ஆண்டு வந்தான். இவன் திருக்கோயிலை மேலும் சிறப்புற அமைத்தான். இவனது பணியை வியந்து சோழ, பாண்டி நாட்டு மன்னர்களும் கோயிலுக்கு உதவினர். திருக்கோயிலில் மூன்று கல்வெட்டுகளும் இன்னும் பல கல்வெட்டை ஒத்த சிதைவுகளும் காணப்படுகின்றன. முதலாவது கல்வெட்டு தம்பிலுவில் அம்மன் கோயிலில் கிடைக்கப் பெற்றது. இது ஏறக்குறைய ஐந்து அடி உயர தூணாகும். அதனிரு பக்கங்களிலும் 38வரி பொறிக்கப்பட்டுள்ளது. மற்றைய இருபக்கங்களிலும் ஒரு சூலாயுதமும், ஒரு மயிலும் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டின் ஆரம்பத்தில் சூரிய, சந்திர வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது 15ஆம், 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் காணப்படுகின்றது.

மற்றைய கல்வெட்டு திருக்கோயிலின் தெற்கேயுள்ள மதிலோரமாக உள்ளது. இது 2 அடி நீள அகலமான ஒரு கல்லிற் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் தமிழ் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். முன் பின் வாசிக்க முடியாதுள்ளது.

அடுத்த கல்வெட்டு கோயிலின் வாசலில் காணப்படுகிறது. இது 4 அடி உயரமும் 8½ அங்குல அகலமும் உடையதாக கல்லிற் செதுக்கப்பட்டுள்ளது. இது 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். நாகர்முனை, வேலூர், கந்தபாணத்துறை, ஈழத்துச் செந்தூர் எனும் பல பெயர்களால் வழங்கப்படும் இத்தலம் இன்று சிதம்பரத்துக்கு உரியதான திருக்கோயில் என்னும் சிறப்புப் பெயரைப் பெறுகின்றது.

## (ஈ) மூர்த்தி, தலம், தீர்த்தம்

இத்தலத்தின் மூர்த்தி சித்திர வேலாயுத சுவாமி, தலம் திருக்கோயில், தீர்த்தம் கிழக்கு திருக்கடல் துறை, தல விருட்சம் வெள்ளை நாவல். பண்டைய அமைப்பின்படி சித்திரவேலாயுதர் கோயிலுக்கு இருபுறமும் சந்நிதிக்குள் புக வழியிருந்தது. வேட முகப்பும் சாமி முகப்பும் என அவ்விருவழிகளும் அழைக்கப்பட்டன. பண்டைய நாளில் சுவாமி வலம் வருவதற்கு 3 வீதிகளும் இருந்தன. அவ்வீதிகளுக்குரிய அடையாளமாக மதிலின் அடிப்பாகங்களையே இன்று காண முடிகிறது. இன்றைய ஆலயத்தில் காணப்படும் கருவறை தூபி கலை நயம் மிக்கது. அது பாண்டிய மன்னர்களின் கட்டடக்கலை மரபுகளைத் தழுவி அமையப் பெற்றதோடு இலங்கையில் உள்ள சிறந்த தூபிகளில் இதுவுமொன்றாகக் காணப்படுகிறது.

## (உ) பூசைகள், விழாக்கள்

இக்கோயிலில் மூன்று வேளைப் பூசை இடம்பெறுகின்றது. இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆடி மாதத்தில் வரும். ஆடி அமாவாசைக்கு எட்டு நாட்கள் முன்பாகத் தொடங்கி ஆடி அமாவாசையன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும். தீர்த்தம் கிழக்கு திருக்கடல் துறையில் இடம்பெறும். தீர்த்தத்திற்கு முதல்நாள் சிறிய இரதங்களில் முருகப்பெருமான் கிராம வலம் வருவார். சித்திரைப்புத்தாண்டு, கந்த சஷ்டி, திருக்கார்த்திகை விளக்கீடு, விநாயக சஷ்டி, திருவெம்பாவை, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி என்னும் காலங்களில் விசேட பூஜைகள் நடைபெறும்.



வெளி வீதி



பாண்டிய கலை மரபிலமைந்த தூபி



உற்சவ மூர்த்தி



சிறிய இரதங்கள்



கிழக்குத் திருக்கடல் துறையில் தீர்த்தோற்சவம் இடம்பெறுதல்

### மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. திருக்கோயிலில் சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் திருப்பணிகள் ஆற்றிய மன்னர்கள் யாவர்?
2. திருக்கோயிலுக்கு வழங்கப்படும் பிற பெயர்கள் யாவை?
3. இக்கோயிலின் மகோற்சவம் எக்காலத்தில் நிகழும்?
4. திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் தீர்த்தம் யாது?

### செயற்பாடு

01) உமது பிரதேசத்தில் உள்ள திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் போன்ற ஓர் ஆலயத்தினை தெரிவு செய்து அவ் ஆலயத்தின் சிறப்பு, வரலாறு பற்றி பெரியவர்களிடம் வினாவி தகவல்களைப் பெற்று அவற்றை வகுப்பறையில் சமர்ப்பித்து காட்சிப் படுத்துக.

### பாடச்சுருக்கம்

- திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயம் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் பதியில் அமைந்துள்ளது.
- வெள்ளை நாவல் பதி என்றும் இவ்வாலயம் அழைக்கப்படுகின்றது
- இக்கோயிலின் மகோற்சவம் ஆடிமாதத்தில் நடைபெறுகிறது.
- சித்திரைப்புத்தாண்டு, கந்த சஷ்டி, திருக்கார்த்திகை விளக்கீடு, விநாயக சஷ்டி, திருவெம்பாவை, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி எனும் காலங்களில் விசேட பூஜைகள் ஆலயத்தில் நடைபெறுகிறது.

## 2. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்.

### (அ) ஆலய அமைவிடம்.

இலங்கையின் வடபால் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகரிலிருந்து வடக்கு முகமாக சுமார் பதினைந்து கிலோ மீற்றர் தொலைவில் காங்கேசன்துறை வீதியிலுள்ள மாவிட்டபுரம் என்னும் இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைந்த புராதனமான முருகன் ஆலயங்களுள் இதுவும் ஒன்று.

### (ஆ) ஆலய வரலாறு.

இற்றைக்கு ஆயிரத்து இருநூற்றைம்பது வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்தது இவ்வாலயம். இங்கு மாருதப்புரவீகவல்லி வழிபட்டு தன் நோய் நீங்கப் பெற்றாள் என்னும் ஒரு வரலாற்றுச் செய்தியும் உண்டு.

உக்கிரப்பெருவழுதி என்னும் ஓர் அரசன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். அவனுடைய மகள் மாருதப்புரவீகவல்லி என்பவளுக்கு குதிரை முகமும் குன்ம வியாதியும் ஒருங்கே வருத்தியது. வைத்தியங்கள் பல செய்தும் அவள் நோய் குணமாகவில்லை. இறுதியில் சாந்தலிங்கம் என்ற முனிவரின் வழிகாட்டலின்படி இலங்கையின் வடபாலுள்ள கீரிமலைக்குச் சென்றாள். அங்கே தவம் புரிந்த நகுலமுனிவரை வணங்கி அவர் ஆசியுடன் கீரிமலையில் தீர்த்தமாடினாள். பின் கோயிற் கடவைப் பிரதேசத்தில் கோயில் கொண்ட கந்தசுவாமியாரை வணங்கி கோயில் தீர்த்தமாகிய நன்னீரூற்றும் சமுத்திர நீரும் சங்கமிக்கும் இடத்தில் நீராடினாள். இங்ஙனம் பல தடவை வணங்கி வர குதிரை முகமும் குன்ம நோயும் நீங்கப் பெற்றமையால் இவ்விடம் மாவிட்டபுரம் எனப்பெயர் பெறலாயிற்று. (மாவிட்டபுரம் என்பது குதிரை முகம் நீங்கப்பெற்ற தலம் என்பதாகும்).

தீராப் பிணி தீர்த்த முருகன் மீது ஆறாக்காதல் கொண்ட மாருதப்புரவீகவல்லி அவனுக்கென ஓர் அழகிய ஆலயத்தை அமைத்தாள். ஆரம்பத்தில் இவ்வாலய கர்ப்பக்கிருகத்தில் வேல் மட்டுமே வழிபடப்பட்டு வந்தது. அவற்றுடன் கந்தசுவாமியார், வள்ளி, தெய்வயானை விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்ய விரும்பிய மாருதப்புரவீகவல்லி அவற்றை இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக மரக்கலம் மூலம் தருவித்தாள்.

திருப்பணி வேலைகள் பூர்த்தியான பின் ஓர் ஆனி மாத உத்தர நட்சத்திரத்தில் கந்தசுவாமியாருக்கும் பரிவாரத் தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலயமும் இடிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் ஆட்சி முடிந்து ஒல்லாந்தர் ஆட்சி தொடங்கவே மூலஸ்தானத்தில் ஒரு வேலை வைத்து வழிபாடு செய்துவந்தனர். 1815இல் கந்தசுவாமியின் திருவுருவை வைத்து மகா கும்பாபிஷேகம் செய்தனர்.

## (இ) ஆலய அமைப்பு.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆலயம் இருவாசல் கொண்டது. முகப்பு கிழக்குப் புறமாகவும் மேற்குப் புறமாகவும் உள்ளது. இக்கோயிலின் உயர்ந்த இராஜகோபுரம் மேற்குப்பக்கத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதன்முதலாக அமைக்கப்பட்ட பெரிய இராஜ கோபுரம் இதுவே ஆகும். அழகிய சிற்பங்கள் ஆலயத்தின் அழகினை மேலும் மெருகூட்டுகின்றன. இவ்வாலயம் மூன்று திரு வீதிகளைக் கொண்டது. ஆலயக்கொடித்தம்பம் முழுவதும் வெள்ளியாற் செய்யப்பட்டது. அழகும் பொலிவும் கொண்ட இவ்வாலயத்தின் தலவிருட்சம் காஞ்சிமா விருட்சம் என்பதாகும்.

## (ஈ) திருவிழாக்கள்.

இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆண்டுதோறும் ஆனிமாத பூர்வபட்ச சஷ்டியிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து நாள்கள் நடைபெறுகிறது. இவ் உற்சவங்களுள் மற்றும் கைலாச வாகன உற்சவம், சப்பறம், தேர், தீர்த்தம் என்பன சிறப்பானவை தேர்த்திருவிழாவன்று பஞ்ச ரதங்கள் பவனிவரும். இவற்றில் முறையே விநாயகர், சிவபெருமான், கந்தசுவாமியார், ஆறுமுகப்பெருமான், சண்டேசுவரர் என்னும் மூர்த்திகள் பவனி வருவர்.




மாவிட்டபுரம் கந்தசுவாமியாரின் தீர்த்த உற்சவம் ஆடி அமாவாசை தினத்தன்று இடம் பெறும். கீரிமலையிலுள்ள **கண்டகி** தீர்த்தத்துறையில் காலை வேளையில் சுவாமி தீர்த்தமாடுதல் இடம்பெறும். தீர்த்தமாடிய பின் சுவாமி கீரிமலையிலேயே அன்று அந்தி வரை இருந்து அருள் புரிவார்.





மகோற்சவத்தை விட கந்தசஷ்டி விழா, தைப்பூசம் என்பனவும் சிறப்புடையவையே. புரட்டாதி மாத விஜயதசமியன்று மாவிட்டபுரம் முருகப்பெருமான் அருகிலுள்ள துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளி வன்னி வாழை வெட்டும் நிகழ்வும் சிறப்பானது. 1829ஆம் ஆண்டு முதல் இவ் வழமை இக்கோயிலில் நடைபெறுகிறது. மாவிட்டபுரம் கந்தசுவாமியாரை **அபிஷேகக் கந்தன்** என்றும் அழைப்பர்.



**தல விருட்சம் காஞ்சிமா**





**மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலுள்ள அழகிய சிற்பங்கள்**



**மஞ்ச உற்சவம்**



**கைலாச வாகன உற்சவம்**



**சப்பற உற்சவம்**



**பஞ்சரத பவனி**

## மேல்வரும் வினாக்களுக்கு விடைதருக

1. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் அமைவிடம் யாது?
2. மாவிட்டபுரம் என்ற பெயர் ஏற்படக்காரணம் யாது?
3. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் இடம்பெறும் உற்சவங்கள் யாவை?
4. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தம் யாது?

## செயற்பாடு

01) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பற்றி சிறு கட்டுரை ஒன்று எழுதிக் காட்சிப் படுத்துக.

## பாடச்சுருக்கம்

- மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் யாழ்ப்பாணத்திலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள காங்கேசன்துறையில் உள்ளது.
- மதுரையை தலைநகராகக் கொண்டு ஆண்ட உக்கிரப்பெருவழுதியின் மகள் மாருதப்புரவீகவல்லி இவ்வாலயத்தை அமைத்தார்.
- இவ்வாலயம் இரண்டு வாயில்களையும் மூன்று வீதிகளையும் கொண்டது.
- மாவிட்டபுரக் கந்தசாமியின் தீர்த்த உற்சவம் ஆடி அமாவாசை அன்று நடைபெறும்.